பக்கங்கள் 06
10/=
Registered as a Newspaper in Srilanka
எதிரொலி
Ethiroli
குரல் 01 அதிர்வு 117 புதன்கிழமை செப்ரெம்பர் 13 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48

# விடுமுறைகள் ரத்து!

இன்று முதல் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை மின்சார சபையின் அனைத்து பணியாளர்களின் விடுமுறைகளும் இரத்து செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மின்சாரசபை இன்று வெளியிட்டுள்ள அவசரஅறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று மதியம் 12 மணி தொடக்கம் 48 மணித்தியாலங்கள் பணிப் புறக்கணிப்பை மேற்கொள்ளவுள்ளதாக இலங்கை மின்சார சபை ஊழியர் சங்கம் தெரிவித்திருந்தது.இந்தப் பணிப்புறக் 06



# காகத்தைப் பார்க்க மைத்திரி திருமலைக்கு!

இலங்கையின் முப்படையினரும் இணைந்து மேற்கொண்டுவரும் ‘நீர்க்காகம் பயிற்சி- VIII - 2017’ கூட்டுப் போர்ப் பயிற்சியை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாளை நேரில் சென்று பார்வையிடவுள்ளார்.

திருகோணமலை , குச்சவெளிக் கடற்கரைப் பகுதியில் நடத்தப்படவுள்ள போர்ப் பயிற்சியை, பார்வையிட வருமாறு இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் மகேஸ் சேனநாயக்க விடுத்திருந்த அழைப்பை ஏற்றே, மைத்திரி நாளை அங்கு செல்லவுள்ளார்.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன, பாதுகாப்புச் செயலர் கபில வைத்தியரத்ன ஆகியோரும் இந்தக் கூட்டுப் பயிற்சியை மைத்திரியுடன் இணைந்து பார்வையிடவுள்ளனர்.இதனை முன்னிட்டு திருகோணமலையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.(அ)

## வித்யா வழக்கு லலித் ஜெயசிங்கவுக்கு பிணை



வித்யா கொலை வழக்கில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் லலித் ஏ. ஜெயசிங்கவுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது. புங்குடுதீவு மாணவி வித்யா படுகொலை வழக்கின் சந்தேகநபரான சுவிஸ்குமார் எனப்படும் ம.சசிக்குமார் தப்பிச் செல்ல உதவியதாக அவர் 06

# 27 ஆம் திகதி தீர்ப்பு



புங்குடுதீவு மாணவி வித்யா கொலை வழக்கு பரபரப்பான இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளது. வழக்கின் விசாரணைகள் யாவும் முடிவுறுத்தப்பட்டுள்ள நிலையில், வழக்கின் தீர்ப்பு இம்மாதம் 27ஆம் திகதி வழங்கப்படும் என இன்று அறிவிக்கப்பட்டுள்ளது. புங்குடுதீவு மாணவி கொலை வழக்கின் வழக்கு தொடுநர் தரப்பு மற்றும் எதிரிகள் தரப்பு சாட்சி பதிவுகள் கடந்த மாதம் நிறைவடைந்திருந்தன. இந்நிலையில் நேற்று வழக்கு தொடுநர் தரப்பு தொகுப்புரை இடம்பெற்றது. அதன் போது வழக்கு தொடுநர் தரப்பின் தொகுப்புரையினை பிரதி சொலிசிஸ்டர் ஜெனரல் குமார் இரட்ணம் மன்றில் நிகழ்த்தினார். அதன் போது , இந்த வழக்கில் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் எதிரிகளாகக் கண்ட ஒன்பது பேரில் முதலாம், ஏழாம் எதிரிகளுக்கு எதிரான குற்ற சாட்டுக்களை சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்க முடியவில்லை. அதற்கான போதிய சாட்சி ஆதாரங்கள் இல்லை. ஏனைய 7 எதிரிகள் மீதான குற்ற சாட்டுக்கள் அனைத்தும் வழக்கு தொடுநர் தரப்பு சாட்சியங்கள் ஆதாரங்களின் அடிப்படையில் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டு உள்ளதாக தெரிவித்தார். இந்நிலையில் எதிரிகள் 06

## தப்பிக்க விட்ட வழக்கு: சுவிஸ் குமாரிடம் விசாரணை

முன்னாள் பொலிஸ் அதிகாரி லலித் ஜயசிங்கவினால் சுவிஸ்குமார் தப்பிக்க விடப்பட்டமை தொடர்பில் சுவிஸ் குமாரிடம் வாக்குமூலம் பெறப்படவுள்ளது. இது தொடர்பான வழக்கு இன்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் இன்று நடைபெற்றது. இதன்போது பொலிஸ் அதிகாரி லலித் ஜயசிங்க பிணையில் விடுவிக்கப்பட்டார். அதன்போது குறிப்பிட்ட நீதிபதி, சிறை அதிகாரிகளின் அனுமதியுடன் எதிர்வரும் 30 ஆம் திகதிக்குள் சுவிஸ் குமாரிடம் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிட்டார். (எ-04)

## குண்டுடன் இளைஞர் கைது

வடமராட்சி அல்வாய்ப் பகுதியில் உள்ளூர் கைக்குண்டு ஒன்றுடன் இளைஞர் ஒருவர் இன்று அதிகாலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பகுதியில் வசிக்கும் 23 வயதான இளைஞரே அவரது வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

அண்மைக்காலமாக வடமராட்சிப் பகுதியில் நடத்தப்பட்ட பெற்றோல் குண்டு வீச்சுகளின் பின்னணியில் இவர் இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. (அ)

## படை அதிகாரிகளுக்கு ஐரோப்பிய பயணத் தடை!

வன்னிப் போரில் பங்கேற்ற 18 படையதிகாரிகள் ஐரோப்பாவுக்கு பயணங்களை மேற்கொள்வதற்கு முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. இலங்கை தொடர்பான ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை தீர்மானங்களை அமுல்படுத்துமாறு, ஆணையாளர் சயிட் அல் ஹூசெய்ன் உறுப்பு நாடுகளிடம் கோரியுள்ளார். இந்த கோரிக்கைக்கு அமைய இறுதிப் போருடன் தொடர் 06

# முறையற்ற இடமாற்றத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம்




முறையற்ற இடமாற்றங்களைக் கண்டித்து வடமாகாண சுகாதார திணைக்களத்துக்கு முன்னால் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது தமக்கு நியாயமான இடமாற்றங்களை வழங்க வேண்டும் எனவும் நீதியற்ற இடமாற்றங்களை இரத்துச் செய்ய வேண்டும் எனவும் அவர்கள் கோஷங்கள் எழுப்பினர். (அ - 4)

# வெளிநாட்டுப் பயணங்கள்: அரச எம்.பிக்களுக்கு தடை

ஆளுங் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களது சகல வெளிநாட்டுப் பயணங்களும் உடன் அமுலுக்கு வரும் வகையில் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. நேற்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

20 ஆவது திருத்தச் சட்டம் அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது.

அதற்கான வாக்கெடுப்பு நிறைவடையும் வரையில் ஆளுந்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை வெளிநாடுகளுக்கு செல்ல வேண்டாம் என்று ஜனாதிபதியும், பிரதமரும் அறிவுறுத்தியுள்ளனர். பொது எதிரணியினர், இந்தத் திருத்தச் சட்டத்தை தோற்கடிக்க முனைப்புக் காட்டிவரும் நிலையில், ஆளுங்கட்சி உறுப்பினர்கள் வெளிநாட்டுப் பயணங்களால் நாடாளுமன்றுக்கு சமுகமளிக்காவிடில், சில சமயங்களில் திருத்தச் சட்டம் தோற்கடிக்கப்படும் நிலை ஏற்படலாமென அரசு கருதுகின்றது. எனவே இத்தகைய நெருக்கடியைத் தவிர்க்கவே, ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வெளிநாட்டுப் பயணங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.(ஆ)

# மருத்துவக் கழிவுகளை கொட்டுவதற்கு எதிர்ப்பு






மட்டக்களப்பில் பிரபல தனியார் வைத்தியசாலை ஒன்றின் கழிவுகளைப் பொதுமக்கள் நெருக்கமாக வசிக்கும் சூழலில் உள்ள தனியார் காணியொன்றில் கொட்டுவதற்கு எடுத்த முயற்சி மக்களின் கடும் எதிர்ப்பால் கைவிடப்பட்டது.

மட்டக்களப்பில் உள்ள பிரபல தனியார் வைத்திய சாலை ஒன்றின் மருத்துவக் கழிவுகள், தனியார் காணி ஒன்றுக்குள் கொட்டப்பட்டு வந்தது. இதனால் அதன் அயலில் வசிக்கும் மக்கள் பெரும் சுகாதாரச் சீர்கேட்டுக்கு முகம் கொடுத்து வந்தனர்.

இந்த நிலையில் குறித்த வைத்தியசாலையின் மருத்துவக் கழிவுகளை ஏற்றி வந்த அம்புலன்ஸை பொதுமக்கள் சூழ்ந்து கொண்டனர். அதிலிருந்து இறக்கப்பட்ட கழிவுகளை அப்புறப்படுத்துமாறு தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

மக்களின் எதிர்ப்பையடுத்து, மருத்துவக் கழிவுகளை மீண்டும் ஏற்றிக் கொண்டு அம்புலன்ஸ் பின்வாங்கியது . குறித்த தனியார் காணிக்குள் இனியும் இவ்வாறான மருத்துவக் கழிவுகளை வைத்தியசாலை நிர்வாகம் போடாமல் உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

## ரணிலில் அமைச்சு ஆலோசகருக்கு ஆப்பு

தேசியக் கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் ஆலோசகரான ஆர். பாஸ்கரலிங்கம் மீது, நீதிமன்ற நடவடிக்கைக்குத் தயாராகுவதாக ஒன்றிணைந்த எதிரணி தெரிவித்துள்ளது. குறித்த அமைச்சு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் இயங்குகின்றது. முன்னாள் ஜனாதிபதியின் செயலாளராக இருந்த லலித் வீரதுங்க, சிறைக்கு அனுப்பப்பட்ட பின்னணியிலேயே, இந்த நடவடிக்கை குறித்து, ஒன்றிணைந்த எதிரணி ஆராய்வதாக தெரியவருகின்றது. நிதியமைச்சின் செயலாளராக முன்னர் இருந்த பாஸ்கரலிங்கம், 1989 இலும் 1990இலும், "அவசர, இரகசிய செலவுகள்" எனக் குறிப்பிட்டு, மில்லியன்கணக்கான பணத்தை, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்குச் செல்ல அனுமதித்தார் என, ஒன்றிணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினரான பந்துல குணவர்தன குற்றஞ்சாட்டினார். மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாச மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டமைக்கு, இந்தப் பணம் ஒதுக்கப்பட்டமை தான் பிரதான காரணமாக அமைந்தது. ஆனால் அப்போது, பாஸ்கரலிங்கம் தான் இப்பணத்தை அனுமதித்தார் என்பது வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.எனினும் தற்போது அவை தொடர்பில் பல ஆவணங்களை கைப்பற்றியுள்ளதாக எதிரணி குறிப்பிட்டுள்ளது. (உ)

## 17 இலட்சம் பணம் கொள்ளை சந்தேகநபர்கள் நால்வர் கைது

கொள்ளையிட்டுத் தப்பிச் சென்ற நால்வர் ஹபராதுவ - போகஹகொட பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளனர். யக்கலமுல்லை - மாகும்புர பகுதியில் சிகரெட்டுக்களுடன் சென்ற வானில் இருந்து சுமார் 17 இலட்சத்து 50,000 ரூபா பணம் கொள்ளையிடப்பட்டுள்ளதாகப் பொலிஸாருக்கு தகவலளிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களின் போது, மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்ற குறித்த சந்தேகநபர்கள் கைதாகியுள்ளனர். கைதுசெய்யப்பட்ட வேளை இவர்கள் வசம் இருந்து 14 இலட்சத்து 47,370 ரூபா பணம், கைக்குண்டு, முகத்தை முழுவதும் மறைக்கும் வகையிலான நான்கு தலைக்கவசங்கள் நான்கு மற்றும் கூரிய ஆயுதங்கள் என்பன பொலிஸா ரால் கைப்பற்றப்பட்டுள்ளன. இவர்கள் காலியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளதோடு, சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இரு சந்தேகநபர்களைத் தேடி ஹபராதுவ பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (உ)

## மருத்துவ சபையின் மனுவுக்கு திகதி குறிப்பு

தொழில்நுட்பத்துக்கும் மருத்துவத்துக்குமான தெற்காசிய நிறுவகத்தில் (சைட்டம்) மருத்துவப் பட்டம் பெறும் மாணவர்கள், இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்யலாம் என, மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய கட்டளைக்கு எதிராக, இலங்கை மருத்துவ சபை, தாக்கல் செய்த மனு மீதான பரிசீலனைக்கு, உயர்நீதிமன்றம், திகதிகளைக் குறித்துள்ளது. அந்த மனு, உயர்நீதிமன்ற நீதியரசர்களான புவனேஹ அலுவிஹார, பிரியந்த ஜயவர்தன, நளின் பெரேரா ஆகியோரடங்கிய குழாம் முன்னிலையில், நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது. அதன்போதே, நீதியரசர்கள் குழாத்தினால் பரிசீலனைக்கான தினங்களாக, செப்ரெம்பர் 14, 15ஆம் திகதிகள் குறிக்கப்பட்டுள்ளன. (உ)

## 45 இலட்சம் மாணவர்களுக்கு இலவசக் காப்புறுதி



நாட்டின் 45 இலட்சம் பாடசாலை மாணவர்களுக்காக "சுரக்ஷா" இலவச காப்புறுதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இலவசக்கல்வியை மேலும் பாதுகாப்பதற்காகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார். காலி சவுத்லாண்ட வித்தியாலயத்தில் நடைபெற்ற வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு அமைச்சர் உரையாற்றினார். இந்த நிகழ்வின்போது கல்வி அமைச்சர் மாணவிகளுக்கு பரிசில்களை வழங்கினார். அமைச்சர் அங்கு மேலும் உரையாற்றுகையில், மாணவர்களின் பாதுகாப்புக்காக அரசாங்கம்பல விசேட வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது. தற்போதைய யுகத்துக்கு ஏற்றவகையில் கல்வி தொடர்பில் உன்னதமான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிந்துள்ளது என்றும் தெரிவித்தார். (உ)

## மாணவருக்கு விளக்கமறியல்

சைட் தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிரான போராட்டங்களை முன்னின்று, செயற்படுத்திய மருத்துவ பீட மாணவ செயற்குழு ஒருங்கிணைப்பாளர் ரயன் ஜெயலத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இன்று மாளிகாகந்தை நீதவான் நீதிமன்றத்தில் அவரை ஆஜர்படுத்திய வேளை, எதிர்வரும் 20ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு, உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சினுள் பலவந்தமாக நுழைந்து அமைச்சின் சொத்துகளுக்குச் சேதம் விளைவித்தமை தொடர்பில் அவர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)


## துவிச்சக்கரவண்டிகள் கையளிப்பு



நெல்லியடி வர்த்தக சங்கத்துக்குட்பட்ட வியாபார நிலையங்களில் 90ஆம் ஆண்டில் இருந்து சுமை தூக்கும் பணியில் ஈடுபட்டுவரும் 5 தொழிலாளர்களுக்கும், துன்னாலைப் பகுதியைச் சேர்ந்த மாணவி ஒருவருக்கும் வடக்கு மாகாணசபை உறுப்பினர் சி.அகிலதாஸ், தனது நிதியில் இருந்து துவிச்சக்கர வண்டிகளை கரவெட்டிப் பிரதேச செயலக சமூகசேவைப் பிரிவின் ஊடாக இன்று காலை வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் பிரதேச செயலர் சிறிமோகனன், நெல்லியடி வர்த்தக சங்கச் செயலாளர் சுரேரஞ்சன், சமூக சேவை உத்தியோகத்தர் சிறிவரதபாஸ்கரன், கரவெட்டி மேற்கு கிராமசேவையாளர் சசிகாந்தன் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.(அ-11)

# 'புளூ வேலுக்கு' தடை விதிக்குக




இளைஞர்களைத் தற்கொலைக்குத் தூண்டும் 'புளூ வேல்' விளையாட்டுக்கு இந்திய அரசு தடை விதிக்க வேண்டுமெனக் கோரி மதுரையைச் சேர்ந்த வழக்கறிஞர் உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

"புளூ வேல் என்ற இணைய விளையாட்டு பிரபலமாகி வருகிறது. இதில் 50 இலக்குகள் வழங்கப்பட்டு இறுதியில் தற்கொலை செய்து கொள்ளும்படி தூண்டப்படுகின்றனர்.

இந்தியாவிலும் அப்பாவிச் சிறுவர்கள், இளைஞர்கள் இந்த விளையாட்டில் ஈடுபட்டு பலியாகி வருகின்றனர். மும்பை, புனே, இந்தூர், சென்னை என பல நகரங்களில் இதுவரை 200 பேர் வரை இறந்துள்ளதாகச் செய்திகள் வந்துள்ளன.

இந்த விளையாட்டு பேஸ்புக், வட்ஸ்ஆப், இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களிலும் பிரபலமாகி வருகிறது.

இந்திய அரசு இந்த விளையாட்டுக்குத் தடை விதிக்க வேண்டும்" என்று வழக்கறிஞர் பொன்னையா என்பவர் தனது மனுவில் தெரிவித்துள்ளார். இது குறித்த தீர்ப்பு விரைவில் வெளிவரவுள்ளது. (இ)



## 6 லட்சம் பேர் இடம்பெயர்வு

# இன்னும் அடங்காத இர்மா சூறாவளி

இர்மா சூறாவளி பாதித்த அமெரிக்காவின் ஜோர்ஜியா மாகாணத்தில் இதுவரை 3 பேர் பலியாகியுள்ளனர்.

மணிக்கு 210 கிலோமீற்றர் வேகத்தில் வீசிய இர்மா சூறாவளி திங்கட்கிழமை மதியம் புளோரிடாவைக் கடந்தது.

ஜோர்ஜியாவை நோக்கிப் பயணப்பட்டு அங்கும் ஏராளமான சேதங்களை இர்மா ஏற்படுத்தியது.

இர்மா சூறாவளிப் பாதிப்பின் காரணமாக ஜோர்ஜியா மாகாணம் முழுவதும் மரங்கள் வேரோடு சாய்ந்து கிடக்கின்றன. உலகின் பரபரப்பான விமான நிலையமான அட்லாண்டாவில் சுமார் 100 விமான சேவைகளட ரத்து செய்யப்பட்டு உள்ளன.

மாகாணத்தின் பெரும்பாலான இடங்களில் மின்சாரம் தடைப்பட்டுள்ளது.

சுமார் 5 லட்சத்து 40 ஆயிரம் மக்கள் ஜோர்ஜியாவின் கடற்கரை ஓரங்களிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார்கள். அமெரிக்க வரலாற்றில் ஒரேசமயத்தில் அதிகளவானோர் இடம்பெயர்ந்தமை இதுவே முதற்றடவை.

இந்த நிலையில் இர்மா சூறாவளி நேற்று செவ்வாய்க்கிழமை காலை அமெரிக்காவின் அலபாமா மாகாணத்தை நோக்கிச் சென்றுள்ளது. இதனால் அங்கும் கனமழை பெய்து வருகிறது. இர்மா சூறாவளி அலபாமா மாகாணத்தை தொடர்ந்து மிசிசிப்பி, டென்னிசி ஆகிய பகுதிகளையும் தாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (இ)

# குரங்குச் செல்பி வழக்கு முடிவு



'குரங்குச் செல்பி' தொடர்பாக விலங்குகள் நல உரிமைக் குழுவுக்கு எதிரான இரண்டு வருடச் சட்டப் போராட்டத்தில் வென்றுள்ளார் ஒரு புகைப்படக் கலைஞர்.

2011 ஆம் ஆண்டு இந்தோனேசிய வனப் பகுதியில், பிரிட்டிஷ் புகைப்படக் கலைஞர் டேவிட் ஸ்லேட்டரின் கமராவைப் பறித்துக்கொண்ட 'நாருடோ' என்ற குரங்கு தன்னைத் தானே செல்ஃபி எடுத்துக்கொண்டது.

இந்தப் புகைப்படத்துக்கான காப்புரிமைப் பாதுகாப்பு குரங்குக்குப் பொருந்தாது என அமெரிக்க நீதிபதிகள் தெரிவித்திருந்தனர். ஆனால், புகைப்படத்தின் மூலம் குரங்கும் பயனடைய வேண்டும் என பீட்டா கூறியிருந்தது.

இதன் பின்னர் குரங்கு சார்பாக பீட்டா செய்த மேன்முறையீடு நேற்றுத் தள்ளுபடி செய்யப்பட்டது. ஆனால், வருங்காலத்தில் இந்தப் புகைப்படத்தின் மூலம் கிடைக்கும் வருமானத்தில் 25 சதவிகிதத்தை தானம் செய்யப் புகைப்படக் கலைஞர் டேவிட் ஒப்புக்கொண்டுள்ளார்.

குரங்கு செல்ஃபியை விற்பதன் மூலம் கிடைக்கும் வருமானத்தில் 25 சதவிகித பணத்தை, நாருடோ குரங்கின் வாழ்விடத்தைப் பாதுகாக்க பணியாற்றும் பதிவு செய்யப்பட்ட தொண்டு நிறுவனத்துக்கு புகைப்படக்கலைஞர் டேவிட் அளிப்பார் என்று பீட்டாவும், டேவிட்டும் வெளியிட்ட கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# சசிகலா 'அவுட்' ஓபிஎஸ், ஈபிஎஸ் பலம்!

## அதிமுக கூட்டத்தில் அதிரடித் தீர்மானங்கள்

அதிமுக பொதுக்குழுக் கூட்டத்தில் பொதுச்செயலாளர் பதவி இல்லை என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டதோடு, சசிகலாவின் பதவிபறிக்கப்பட்டதோடு, ஓபிஎஸ் எடப்பாடி பழனிச்சாமிக்கு முழு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

அதிமுக பொதுக்குழுக் கூட்டம் பெரும் பரபரப்புக்கு மத்தியில் நேற்று நடைபெற்றது. இதில் பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கட்சி விதி 19 இல் திருத்தம் செய்யும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

கட்சி அணிகள் இணைந்ததை வரவேற்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர் இரட்டை இலையை மீட்டல், தினகரன் நியமனமும், அவரது அறிவிப்புகளும் செல்லாது போன்ற தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

பொதுச்செயலாளராக சசிகலா தேர்வு செய்யப்பட்டது செல்லாது எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஜெயலலிதாவால் முன்னர் பொறுப்புகளுக்கு நியமிக்கப்பட்டவர்கள் அவரவர் பொறுப்புகளில் தொடர்வார்கள் எனவும் அறிவிக்கப்பட்டது.

கடைசியாக, ஜெயலலிதா மட்டுமே கட்சியின் பொதுச்செயலாளர் எனவும், இனி மேல் பொதுச்செயலாளர் பதவி என்பதே இல்லை என்றும் ,கட்சியின் வழிகாட்டுதல் குழுவுக்கு முழு அதிகாரம் அளிக்கப்பட்டு வழிகாட்டு குழுத்தலைவர் ஓபிஎஸ், இணைத்தலைவர் எடப்பாடி பழனிச்சாமிக்கு முழு அதிகாரம் அளிக்கும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது கட்சியிலிருந்து ஒருவரை நீக்கவும், இணைக்கவும் ஓபிஎஸ், எடப்பாடி பழனிச்சாமிக்கு முழு அதிகாரம் தரும் வகையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் மூலம் கட்சியின் முழு அதிகார அமைப்பாக ஓபிஎஸ்ஸும், எடப்பாடி பழனிச்சாமியும் மாறியுள்ளனர். (இ)

# பிரதமராகத் தயார்!

2019 நாடாளுமன்றத் தேர்தலில் பிரதமர் வேட்பாளராக போட்டியிடத் தயார் என்று காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

இரு வார சுற்றுப்பயணமாக அமெரிக்கா சென்றுள்ள ராகுல் காந்தி கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள பேர்க்லி பல்கலைக் கழகத்தில் உரையாற்றினார். அப்போது அவரிடம்எதிர்வரும்2019 நாடாளுமன்றத்தேர்தலில் காங்கிரஸின் பிரதமர் வேட்பாளராக களமிறங்குவீர்களா என்று கேள்வி எழுப்பப்பட்டது. அதற்குப் பதிலளித்த ராகுல் காந்தி, "பிரதமர் வேட்பாளராகப் போட்டியிடத்தயார் ஆனால்இதுகுறித்து நான்முடிவு செய்ய முடியாது. காங்கிரஸ் கட்சிதான் முடிவு செய்ய வேண்டும்" என்றார். (இ)

## ஐ.எஸ். பிடியிலிருந்து

# மீண்ட பாதிரியார்



யேமனில் ஐ.எஸ் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட கேரளப் பாதிரியாரான உழுன்னலில் என்பவர் விடுவிக்கப்பட்டுள்ளார் என்று இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சுஷ்மா ஸ்வராஜ் நேற்று செவ்வாய்க்கிழமை தனது ருவிட்டர் பக்கத்தில், "பாதிரியார் தாம் உழுனல்லில் விடுவிக்கப்பட்டுள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்து கொள்கிறேன்" என்று பதிவிட்டுள்ளார்.

கேரள மாநிலம் கோட்டயத்தைச் சேர்ந்த கத்தோலிக்க கிறிஸ்தவ பாதிரியாரான தாம் உழுன்னல் யேமன் நாட்டில் அன்னை தெரசா அறக்கட்டளை சார்பில் நடத்தப்படும் முதியோர் இல்லத்தில் பணியாற்றி வந்தார்.

கடந்த 2016 மார்ச் மாதம் ஐ.எஸ். தீவிரவாதிகள் முதியோர் இல்லம் மீது திடீர்த் தாக்குதல் நடத்தினர். அங்கிருந்த 4 இந்தியக் கன்னியாஸ்திரிகள், 2 யேமன் பெண்கள், 8 முதியவர்கள் உள்ளிட்ட பலரைக் கொலை செய்தனர். பாதிரியாரைப் பிணைக்கைதியாக பிடித்துச் சென்றனர்.

தன்னை விடுதலை செய்ய மத்திய அரசு நடவடிக்கை எடுக்குமாறு கடந்த டிசெம்பரில் வீடியோ மூலம் பாதிரியார் வேண்டுகோள் விடுத்தார்.இதனையடுத்து இந்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாக அவர் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளார். (இ)

## ரோஹிங்கியர்களை வேட்டையாடும்


# கண்ணிவெடிகள்



மியான்மரில் ஏற்பட்ட வன்முறையால் அங்கிருந்து தப்பிச் செல்லும்போது இராணுவம் பதித்த நிலக் கண்ணிவெடிகளில் சிக்கி ஏராளமான முஸ்லிம்கள் ஊனமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கண்ணிவெடியால் பாதிக்கப்பட்டு, மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருபவர்கள் "தம் மீதும் இராணுவம் துப்பாக்கிச்சூடு நடத்தியபோது ஓடியதாகவும், அப்போதே நிலக்கண்ணிவெடிகளின் மீது கால் பட்டு, அவை வெடித்ததாகவும் தெரிவித்தனர்.

ஆயினும் தாங்கள் ஒருபோதும் மக்கள் தப்பித்துச் செல்லும் பகுதிகளில் கண்ணிவெடிகளைப் புதைக்கவில்லை என்று மியான்மர் இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். ஆனால் முஸ்லிம் போராளிகள் இத்தகைய நவீன கண்ணிவெடிகளைக்கையாளவோ, கொள்வனவு செய்யவோ முடியாதவர்கள் என்றும், இதனை மியான்மர் இராணுவமே புதைத்தது என்றும் பொது அமைப்புகள் குற்றம் சாட்டியுள்ளன. (இ)



# பாகிஸ்தானிடம் பணிந்த உலகம்

உலகப் பதினொருவர் அணிக்கு எதிரான முதலாவது 'ரி-20' போட்டியில், பாகிஸ்தான் அணி 20 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

லாகூரில் நடைபெற்ற இந்தப் போட்டியில் , நாணயச் சுழற்சியில் வென்ற உலகப் பதினொருவர் அணித் தலைவர் டுபிளசி களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

பாகிஸ்தான் அணிக்கு பாபர் ஆசம், பகர் ஜமான் இணை ஓரளவு சுமாரான ஆரம்பத்தைக் கொடுத்தது. பவுண்டரி மழை பொழிந்த பாபர் ஆசம், 33ஆவது பந்தில் அரைச்சதம் அடித்தார்.

2ஆவது விக்கெட்டுக்கு 122 ஓட்டங்கள் சேர்த்த போது, அகமது ஷேசாத் (39 ஓட்டங்கள்) அவுட்டானார். பாபர் ஆசம் 52 பந்தில்86 ஓட்டங்கள் எடுத்த நிலையில் வீழ்ந்தார். சொய்ப் மாலிக் 38, அணித்தலைவர் சர்பராஸ் அகமது 4 ஓட்டங்கள் எடுத்தனர். பாகிஸ்தான் அணி 20 ஓவர்களில் , 5 விக்கெட்டுக்கு 197 ஓட்டங்கள் எடுத்தது. இமாம் வாசிம் (15) ஆட்டமிழக்காமல் இருந்தார். உலகப் பதினொருவர் அணி சார்பில் திசர பெரேரா 2 விக்கெட்டுகளையும், மோர்னி மோர்கல், பென் கட்டிங், இம்ரான் தாகிர் ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

கடின இலக்கைத் துரத்திய உலகப் பதினொருவர் அணியை தமிம் இக்பால் (18 ஓட்டங்கள்), ஆம்லா (26 ஓட்டங்கள்), டுபிளசி (29 ஓட்டங்கள்), பெய்ன் (25 ஓட்டங்கள்) என, வரிசையாக ஏமாற்றினர். மில்லர்,எலியட் , பெரேரா என, பின் வரிசை வீரர்களும் அணியைக் கைவிட்டனர். டரன் சமி 29 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார். முடிவில், உலகப் பதினொருவர் அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்கு 177 ஓட்டங்களை மட்டும் எடுத்தது. இதனால் பாகிஸ்தான் அணி 20 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. (இ)

## கோலி–கங்குலி ஒற்றுமை

கோலிக்கும் கங்குலிக்கும் இடையே நிறைய ஒற்றுமைகள் உள்ளன என்று ஆஸி. முன்னாள் அணித்தலைவர் மைக்கல் கிளார்க் தெரிவித்துள்ளார்.

"ஆஸ்திரேலிய அணியினர் தங்கள் ஆற்றல்களைச் சீரான ஆட்டத்திறனாக மாற்ற இந்தத் தொடர் நல்ல வாய்ப்பு. இந்த அணியில் நல்ல திறமையான வீரர்கள் உள்ளனர், இவர்கள் தங்கள் திறமையை நம்பிச் செயற்பட வேண்டும்.

சௌரவ் கங்குலி, விராட் கோலி ஆகியோரின் தலைமைத்துவத்தில் ஒற்றுமைகள் தெரிகின்றன. சௌரவ் கங்குலி ஒரு போதும் பின் இருக்கைக்குச் செல்ல மாட்டார், தோனி, கோலி, அனில் கும்ப்ளே ஆகியோரும் தங்கள் பாணியில் இதனைச் செய்துள்ளனர். ஆக்ரோஷமான தலைவரால் வழிநடத்தப்படும் தற்போதைய இந்திய அணி தோல்வியடைய விரும்புவதில்லை.

ஆஸ்திரேலியா 4-1 என்று வென்றால் மீண்டும் முதலிடம் பிடிக்கும். 2019 உலகக்கிண்ணத்துக்கு இன்னும் நாட்கள் உள்ளன, ஆனால் நாங்கள் விரும்பிய அளவுக்கு வெற்றிகளைப் பெறவில்லை என்பதே உண்மை" என்றும் கிளார்க் தெரிவித்துள்ளார். (இ)

# பலநாள் திருடன் பிடிபட்டான்




இந்தியாவில் வெளியாகும் திரைப்படங்களைச் சட்ட விரோதமாக இணையத்தளத்தில் பதிவேற்றும் 'தமிழ்கன்' நிர்வாகியைப் பிடித்த திரைத்துறையினர், அவரைத் திருவல்லிக்கேணிப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

வேலூர் மாவட்டம், திருப்பத்தூரைச் சேர்ந்த கௌரிசங்கர் என்பரே இவ்வாறு பிடிக்கப்பட்டவர் ஆவார். சுமார் 100 போலி இணைய முகவரிகள் மூலம் அவர் சட்டவிரோதமாக 'தமிழ்கன்' இணையத் தளத்தில் திரைப்படங்களைப் பதிவேற்றி வந்துள்ளார் என்று தெரிய வந்துள்ளது. கடந்த 6 மாதங்களாக கௌரி சங்கரை சென்னைக்கு வரவழைக்கத் திட்டமிட்டு, திரைத்துறையினர் அவரை வசமாகப் பிடித்து திருவல்லிக்கேணி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

இந்தக் கைது நடவடிக்கையை அடுத்து தயாரிப்பாளர் சங்கத் தலைவரும் நடிகர் சங்கப் பொதுச் செயலாளருமான விஷால் திருவல்லிக்கேணி பொலிஸ் நிலையத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர், 'இந்தக் கைது தொடர்பாக நாங்கள் பொலிஸாரிடம் உரிய முறையில் புகார் கொடுத்துள்ளோம். எனவே, இதுகுறித்து தற்போது என்னால் எதுவும் கூற முடியாது. இதைப் பற்றி அதிகாரபூர்வமாக நான் பேச எனக்கு ஒரு மணி நேரம் அவகாசம் தேவைப் படுகிறது' என்றார்.(இ)

# வித்தியாசத்துடன் 'ஐபோன் 8 பிளஸ்'



அப்பிள்நிறுவனம் புதிதாக 'ஐபோன் 8' பிளஸ்கைபேசியை அறிமுகம் செய்துள்ளது.

அப்பிள் நிறுவனத்தின் முதல் ஐபோனை பத்து ஆண்டுகளுக்கு முன் ஸ்டீவ் ஜொப்ஸ் அறிமுகம் செய்து வைத்தார். அதன் பின் புதிய வடிவிலான இரு வகையான ஐபோன்களை தற்போது அப்பிள் நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது. 'ஐபோன் 8 ப்ளஸ்' எனப் பெயரிடப்பட்டுள்ள இந்தப் புதிய கைபேசிகள், பழைய ஐபோன்களை விட முற்றிலும் மாறுபட்ட வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளன. அதேபோல் மேம்படுத்தப்பட்ட அப்பிள் கடிகாரம் மற்றும் எச்.டி டிவிக்களையும் அப்பிள் நிறுவனம் அறிமுகம் செய்யவுள்ளது. (இ)

# தப்பினார் ரெய்னா



இந்திய கிரிக்கெட் அணி வீரரான சுரேஷ் ரெய்னா கார் விபத்தொன்றில் மயிரிழையில் தப்பியுள்ளார்.

இந்திய ப்ளூ அணியின் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கும் சுரேஷ் ரெய்னா, கான்பூரில் நடைபெறும் கிரிக்கெட் போட்டியில் பங்கேற்க காசியாபாத்தில் இருந்து தனது சொகுசுக் காரில் சென்று கொண்டிருந்தார். நேற்று அதிகாலை 2 மணியளவில் எட்டவா என்ற இடத்தின் அருகே வந்து கொண்டிருந்த போது, காரின் ரயர் திடீரென வெடித்தது. இதனால் கார் நிலை தடுமாறி வீதியின் குறுக்கே சென்று , பின்னர் சுவரோடு மோதியபடி நின்றது. எனினும் இதன்போது ரெய்னாவுக்கு எவ்விதக் காயங்களும் ஏற்படவில்லை. அவர் வேகமாக வந்திருந்தால், உயிரிழப்பு ஏற்பட்டிருக்கும் எனவும், மெதுவாகக் காரைச் செலுத்தியதாலேயே ரெய்னா தப்பிக்க முடிந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ)

# ரோஜாவா? சேதுபதியா?



தியாகராஜன் குமாரராஜா இயக்கும் புதிய படத்தில் விஜய் சேதுபதி நடித்து வரும் கதாபாத்திரத்தின் 'பெர்ஸ்ட் லுக்' நேற்று வெளியிடப்பட்டது. இதற்கு சமூக வலைத்தளங்களில் பெரும் வரவேற்புக் கிடைத்துள்ளது.

'ஆரண்ய காண்டம்' படத்தைத் தொடர்ந்து, நீண்ட நாட்கள் கழித்துத் தனது அடுத்த படத்தின் பணிகளைத் தொடங்கினார் இயக்குநர் தியாகராஜன் குமாரராஜா. ஃபகத் பாசில், விஜய் சேதுபதி, சமந்தா உள்ளிட்ட பலர் நடித்து வரும் இந்தப்படத்துக்கு ஒளிப்பதிவு செய்து வருகிறார் பி.எஸ்.வினோத்.

இப்படத்துக்கு 'சூப்பர் டீலக்ஸ்' என்று தலைப்பு வைக்கப்பட்டுள்ளதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை இப்படத்தின் படப்பிடிப்புத் தளத்தின் புகைப்படங்கள் மட்டுமே வெளியாகியுள்ளன.

இதில் திருநங்கை கதாபாத்திரத்தில் நடித்து வருகிறார் விஜய் சேதுபதி. தற்போது அந்தக் கதாபாத்திரத்தின் தோற்றத்தைத் தனது ருவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ளார் இயக்குநர் தியாகராஜன் குமாரராஜா. ஷில்பா என்ற கதாபாத்திரத்தில் விஜய் சேதுபதி நடித்திருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். (இ)




# மதகுருமாருக்கு காப்புறுதி

அனைத்து வயோதிப மதகுருமார்களுக்கும் காப்புறுதி திட்டத்தை வழங்குதல் தொடர்பில் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன கவனம் செலுத்தியுள்ளார். ஜனாதிபதி தலைமையில் தேசிய பௌத்த அறிஞர் சபைக் கூட்டம் நேற்று பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. இதன்போது முன்வைக்கப்பட்ட யோசனைக்கமைய ஜனாதிபதி இவ்விடயம் தொடர்பில் தொடர்புடைய அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கினார். தர்மாசிரியர் பரீட்சையில் சித்தியடைந்தோருக்கான நியமனம் வழங்குதல் மற்றும் பௌத்த சமய உயர் கல்விக்காக நாட்டுக்கு வருகைதரும் வெளிநாட்டு பிக்குமாருக்குச் சலுகை வழங்குதல் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.
இந்தக் கலந்துரையாடலில் தேசிய பௌத்த சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் பேராசிரியர் வண. கொட்டபிற்றியே ராகுலதேரர், பேராசிரியர் வண.கல்லேல்லே சுமணசிறி தேரர், கலாநிதி வண. அக்குரற்றியே நந்த தேரர் உள்ளிட்ட தேரர்களும் பௌத்த சாசன அமைச்சின் செயலாளர் சந்ரபிரேம கமகே உள்ளிட்ட அலுவலர்களும் கலந்து கொண்டனர். (உ)

# லொறி மோதி விபத்து 9 வயது மாணவி பலி

நுவரெலியாவில் 9 வயதுடைய பாடசாலை மாணவி மீது லொறி மோதியதில் அவர் உயிரிழந்துள்ளார்.
நுவரெலியாவில் இடம்பெற்ற 'செயல்பட்டு மகிழ்வோம்' என்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு வீடு திரும்பிய போதே டயகம நகரத்தில் மரக்கறி ஏற்றும் லொறி மாணவி மீது மோதியுள்ளது. நேற்று மாலை 6 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
சம்பவத்தில் உயிரிழந்த மாணவி டயகம கிழக்கில் உள்ள தமிழ் பாடசாலையில் கல்வி கற்கும் என்டன் ருக்ஸி என அடையாளம் காணப்பட்டுள்ளார்.
குறித்த மாணவி வீதியின் ஓரமாகப் பயணித்தபோது டயகம ஈஸ்ட் பகுதியிலிருந்து டயகம நகரத்துக்கு வந்த மரக்கறி லொறி வேகக் கட்டுப்பாட்டை இழந்து மாணவியின் மீது மோதியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச் சம்பவம் தொடர்பில் லொறியின் சாரதியை கைது செய்திருப்பதோடு, லொறியையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.
இவ்விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை டயகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (உ)

# இன்றைய கருத்தோவியம்



நன்றி - அவந்த ஆட்டிக்கல

# பதக்கம் வழங்கும் நிகழ்வு

சுற்றாடல் தொடர்பாக பதக்கம் வழங்கும் நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெறவுள்ளது.
ஜனாதிபதி மாளிகையில் இன்று பிற்பகல் நடைபெறவுள்ள இந்த நிகழ்வு 7ஆவது தடவையாக இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்த பதக்கம் வழங்கும் விழாவில் 9 மாவட்டங்களின் 16 பாடசாலைகளைச் சேர்ந்த 40 புத்தாக்குநர்கள் பதக்கங்களைப் பெற்றுக் கொள்ளவுள்ளனர். 'சுற்றாடல் எம்மைப் பாதுகாக்கும் நாம் சுற்றாடலைப் பாதுகாப்போம்' என்ற தொனிப் பொருளின் கீழ் இம்முறை இந்த விழா இடம்பெறுகின்றது. உண்மையான சுற்றாடல் நேயமிக்கவர்களை உருவாக்குவதே இதன் நோக்கமாகுமென்று மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் லால் மேர்வின் தர்மசிறி தெரிவித்துள்ளார். (உ)

# ஏவுகணைப் போராளி மேன்முறையீடு

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர் ஒருவரால், நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட கட்டளையைச் சவாலுக்கு உட்படுத்தி, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளது. விடுதலைப்புலி உறுப்பினர், பயங்கரவாத விசாரணைப் பிரிவில் வழங்கிய ஒப்புதல் வாக்குமூலம் சட்டரீதியானதென, அநுராதபுரம் விசேட மேல் நீதிமன்ற நீதிபதி மகேஷ் வீரமன் வழங்கிய கட்டளையை சவாலுக்கு உட்படுத்தியே, இந்த மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
சட்டத்தரணி காலிங்க ரவிந்திரவின் ஊடாகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேற்படி மேன்முறையீட்டு மனு, புலிகள் அமைப்பின் ஏவுகணைப் படையணியின் முக்கிய போராளியான புவலன் என்றழைக்கப்படும் இராசதுரை ஜெகன் சார்பிலேயே தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
2000ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20ஆம் திகதி, பலாலியிலிருந்து இரத்மலானைக்குப் பறந்துகொண்டிருந்த அன்டனோவ்-32, வில்பத்து சரணாலயத்தில் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகளின் ஏவுகணைத் தாக்குதலில் தலாவ வீரவெவ பிரதேசத்தில் சுட்டுவீழ்த்தப்பட்டது.
இதனால், ரஷ்ய விமானி மற்றும் பாதுகாப்பு படையினர் உள்ளிட்ட 31 பேர் பலியாகினர். இந்த வழக்கில், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் ஏவுகணைப் படையணியின் முன்னாள் உறுப்பினர்களான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இராசதுரை ஜெகன் மற்றும் நல்லான் சிவலிங்கம் ஆகிய இருவருக்கு எதிராகவே குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இருவரும், இம்மாதம் 25ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (உ)

# கைத்தொழில் அலுவலகம் திறப்பு


கைத்தொழில் மற்றும்வர்த்தக அலுவல்கள் அமைச்சினால் மாஹதுற தொழிற்பேட்டையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய தொழில்நுட்பப் பரிமாற்றல் மத்திய நிலையம் பிரதமர் தலைமையில் இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.
சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழிற்றுறையை மேம்படுத்துவதற்கு இது பெரிதும் உதவும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
தொழிற்துறை உற்பத்தி தயாரிப்புக்களை சிறப்பாகவும் , சிறந்த தொழில்நுட்பத்துடனும் அபிவிருத்தி செய்வதற்கு இதன்மூலம் வழிஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

# கொழும்பில் நூல் வெளியீடு



கனக. மனோகரன் எழுதிய "ஈழத்தமிழர்கள் -எமக்காக வாழ்ந்தவர்கள்"என்னும் நூல் வெளியீட்டு விழா கடந்த 10.09.2017 அன்று பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது. தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளைத் தலைவர சட்டத்தரணி மு.ஏ.தவராசா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக சட்டத்தரணி மு.ஏ. மகாதேவன் கலந்து கொண்டார். (ஆ)

# 19 வீதமான சிறுவர்கள் இணையத்தில் ஆபாசம்



இலங்கையில் 10 தொடக்கம் 17 வயதுக்கு இடைப்பட்ட பிள்ளைகளில் 19 சதவீதமானோர் இணையத்தளங்களில் ஆபாசப் படங்களைப் பார்க்கிறார்கள் என்ற அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.
தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'இணையத்தளத்தில் இருந்து பாதுகாப்பு' என்ற தொனிப் பொருளிலான நிகழ்வு, காலி மாலாவே பிரதேசத்தில் இடம்பெற்றது.இதன் போதே இந்தத் தகவல் தெரியவந்துள்ளது. அந்த நிகழ்வில் கலந்து கொண்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பொறுப்பான விசாரணை அதிகாரி சம்பி கே அயகமவே இந்தத் தகவலை வெளியிட்டார்.
இதேவேளை, குருநாகல், கண்டி, இரத்தினபுரி, கொழும்பு, கம்பஹா, களுத்துறை, நீர்கொழும்பு ஆகிய பிரதேசங்களில் இணையத்தள துஷ்பிரயோகங்கள் அதிகமாக இடம் பெறும் வலயமாக இனங் காணப்பட்டுள்ளதாகவும் அவர் இதன்போது மேலும் குறிப்பிட்டுள்ளார்.(அ)

# நாளை நாளும் கோளும்

14.09.2017 வியாழக்கிழமை ஏவிளம்பி வருடம் ஆவணி மாதம் 29 ஆம் நாள்

நவமி மு.இ. 09.24 வரை | மிருகசீரிடம் காலை 06.39 வரை | திருவாதிரை பி.இ. 05.02 | மரணயோகம்

இராகுகாலம் 01.33 - 03.03 | சுபநேரம் 07.33 - 09.03 | எமகண்டம் 06.03 - 07.33

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நலம் | இலாபம் | பொறுமை | போட்டி | நட்பு | ஆதரவு | கவனம் | காரியசித்தி | உதவி | தேர்ச்சி | புகழ் | நற்செயல் |

எதிரொலி
Ethiroli

## அந்த நாள் ஞாபகம்.....!



**1896.09.13**

இலங்கைத் தேசிய கீதத்தை தமிழில் மொழி பெயர்த்த ஈழத்து தமிழறிஞரான , யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டையைச் சேர்ந்த மு. நல்லதம்பி பிறந்தார்.

## வறட்சி நிவாரணம்



கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் வறட்சி இலகு வேலைத் திட்டத்தின் பயனாளிகளுக்கான வறட்சி நிவாரணத்தை உதவிப் பிரதேசசெயலர் ரஜீவ் இன்று முற்பகல் 11 மணியளவில் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கினார். (ஆ)



# மாணவிகளுக்கு மிரட்டல் எட்டுப் பேர் மயக்கம்

மஸ்கெலிய, காட்டுமஸ்கெலியா தோட்டம் லங்கா பிரிவில், இன்று காலை பாடசாலைக்குச் சென்ற மாண விகளை வழியில் இடைமறித்த இனந் தெரியாத இருவர், கத்தியைக் காட்டி மிரட்டியுள்ளனர். இதனால் அந்த மாணவிகள் மயக்கமுற்று கீழே விழுந் துள்ளனர். இச்சம்பவத்தில் பாதிக்கப் பட்ட எட்டு மாணவிகள் பிரதேச மக்களின் உதவியுடன் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளன. கறுப்பு மற்றும் வெள்ளை நிற ஆடை களை அணிந்திருந்த இருவரே, இவ் வாறு மாணவிகளைக் கத்தியைக் காட்டி மிரட்டியுள்ளதாக தெரியவந்துள் ளது. இவர்களில் இரு மாணவிகள் இன்னும் மயக்க நிலையிலிருந்து மீளவில்லை என்றும் இவர்களைத் தொடர்ந்தும் சிகிச்சைக்கு உட்படுத்தி வருவதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மஸ்கெலியப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (எ)

## டெங்குக்கு சம்பளத்துடன் விடுமுறை வேண்டும்


டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ள அனைத்து அரச ஊழியர்களுக்கும், ஊதியத்துடன் கூடிய விசேட விடுமுறையை வழங்குவதற்கான நடவடிக்கையை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டுமென, தேசிய தொழிற்சங்க நிலையம் கோரிக்கை விடுத்துள்ளது. இத்தகைய விசேட விடுமுறையை வழங்குவதற்கான சூழ்நிலை தற்போது காணப்படுவதாக, அந்நிலையத்தின் செயலாளர் மஹிந்த ஜெயசிங்க தெரிவித்தார். (உ)

## தனித்துப் போட்டியிட்டால் முகத்திரை கிழிக்கப்படும்

“எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில், மலையக கட்சிகள் அவரவர் சின்னத்தில் தனித்துப் போட்டியிட்டால், மலையக மக்களின் ஆதரவு யார் பக்கம் என்பது தெரிய வரும். அப்போது சில நபர்கள் சொல்லும், மலையகம் எங்கள் பக்கம் என்ற முகத்திரை கிழிக்கப்படும்” என, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொது செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார். மஸ்கெலியா - பெயார்லோன் தோட்டத்தில் சுமார் 30 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட சன சமூக நிலையத்தின் திறப்பு விழா, நேற்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு உரையாற்றிய அவர்,

“அவரவர் தனது கட்சியில் போட்டியிடுவார்களேயானால், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சேவல் சின்னத்தில் போட்டியிடும். தைரியம் இருந்தால், சவாலானவர்கள் அவரவர் கட்சி சின்னத்தில் போட்டியிட்டு பார்க்கவும். இந்தச் சவாலுக்கு நான் தயார் என்றும் தெரிவித்தார். (உ)

## 18 வருடங்களின் பின் தேவாலயத் திருவிழா



முகமாலை புனித ஆரோக்கிய மாதா ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா 18 வருடங்களின் பின்னர் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது.

நாளை மறுதினம் மாலை 4 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நவநாள் வழிபாட்டுடன் திருப்பலி நடைபெற்று 17 ஆம் திகதி காலை 6.30 மணிக்கு திருநாள் திருப்பலி நடைபெற்று அன்னையின் ஆசீர்வாதம் இடம்பெறவுள்ளது.

கடந்த 18 வருடங்களாக முகமாலை போர் முன்னரங்கப் பகுதியாக இருந்து வந்தது. இதனால் அங்கு மக்கள் வசிக்க முடியாமல் இடம்பெயர்ந்திருந்தனர். தற்போது முகமாலையின் ஒருபகுதி கண்ணிவெடி அகற்றப்பட்டு மக்கள் பாவனைக்கு வழங்கப்பட்ட நிலையில், 18 வருடங்களின் பின்னர் ஆரோக்கிய மாதாவின் திருவிழா இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ-13)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**படை...**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
புடைய 18 இராணுவ அதிகாரிகளுக்கு, ஐரோப்பிய நாடுகளுக்கு பயணங்களை மேற்கொள்ள முடியாத நிலைமை ஏற்படும் என தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை தீர்மானத்துக்கு அமைய குறித்த இராணுவ அதிகாரிகள் ஐரோப்பிய நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டால் அவர்களைக் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்த முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் இந்த விடயம் குறித்து இலங்கை அரசாங்கம் இதுவரையில் பதிலளிக்கவில்லை. இதேவேளை, யாரை கைது செய்ய வேண்டும் என்ற பட்டியலை ஐக்கிய நாடுகள் அமைப்பின் முன்னாள் அதிகாரி யஸ்மீன் சூகா, ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையிடம் சமர்ப்பித்துள்ளார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

**வித்யா...**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கைது செய்யப்பட்டிருந்தார். இந்நிலையில் 3 லட்சம் ரொக்க பிணையிலும், 5 லட்சம் ரூபா பெறுமதியான 4 சரீரப் பிணையிலும், பிணையில் செல்ல அவருக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. அத்துடன், அவரது கடவுச்சீட்டை முடக்கவும், வெளிநாடு செல்வதற்குத் தடை விதித்தும் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஒவ்வொரு மாதமும் முதல் திங்கட்கிழமைகளில் கொழும்பிலுள்ள குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு சென்று கையொப்பமிட வேண்டும் எனவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்த வழக்கு விசாரணைகள் எதிர்வரும் 5ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

அவர் கடந்த ஜூலை 15 ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தார். (உ)

**விடுமுறைகள்...**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கணிப்பை முறியடிக்கவே, ஊழியர்களின் விடுமுறைகளை ரத்துச் செய்வதாக அறிவிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. (அ)

**தீர்ப்பு...**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தரப்பு சட்டத்தரணிகளின் தொகுப்புரை இன்று நடைபெற்றது.

மாணவி வித்யா 2015 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதி காணாமல் போயிருந்த நிலையில் மறுநாள் 14 ஆம் திகதி காலை சடலமாக மீட்கப்பட்டிருந்தார். மே மாதம் 26 ஆம் திகதி யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வித்யாவின் குடும்பத்தினரைச் சந்தித்து ஆறுதல் தெரிவித்தார். அதன்போது விசாரணைகள் விரைவாக முடிக்கப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்படுவர் எனவும் குறிப்பிட்டிருந்தார். இரண்டு வருடங்களாக வழக்கு விசாரணைகள் நடைபெற்றுவந்த நிலையில் 2017 ஆம் ஆண்டு மே 23 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் ட்ரயல்-அட்பார் முறையில் வழக்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. அதற்கென மூன்று நீதிபதிகள் கொண்ட குழு அறிவிக்கப்பட்டது. முதலாவது ட்ரயல்-அட்பார் விசாரணை ஜூன் 12 ஆம் திகதி ஆரம்பமாகியது. இந்நிலையில் சுமார் நான்கு மாத ட்ரயல்-அட்பார் விசாரணைகளின் நிறைவில் இம்மாதம் 27ஆம் திகதி தீர்ப்பு வழங்கப்படும் என இன்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## வாக்குறுதி என்னாயிற்று? மக்கள் கவலை

கிளிநொச்சி வன்னேரிக்குளம், குஞ்சுக்குளம் கிராமத்தில் உவரடைந்த நிலப்பரப்பில் ஆமணக்கு பயிர்ச் செய்கை மேற்கொள்வதென முடிவுகள் எடுக்கப்பட்ட போதும் அவை இதுவரை நிறைவேற்றப்படவில்லை என குஞ்சுக்குளம் கிராம மக்களினால் கவலைத் தெரிவிக்கப்படுகின்றது. மண்டைக்கல்லாறு வழியாக கடல் நீர் உட்புகுவதன் காரணமாக முழுமையாக உவரடைந்த குஞ்சுக்குளம் கிராமத்தில் கிராம மக்கள் முழுமையாக இடம் பெயர்ந்துள்ளதுடன் இக்கிராமத்தில் 450 ஏக்கருக்கு மேற்பட்ட நெற்செய்கை நிலம் உவர் நிலமாக மாற்றமடைந்ததுள்ளது. இந்த உவர் நிலத்தில் ஆமணக்கு பயிர்ச் செய்கை மேற்கொள்வதென கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டங்களில் தீர்மானங்கள் எடுக்கப்பட்ட போதிலும் அது இதுவரை நிறைவேற்றப்படவில்லை என கிராம மக்களினால் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை மண்டைக்கல்லாறு வழியாக உவர் நீர் உட்புகுவதன் காரணமாக உவர் ஆபத்தை எதிர்கொண்டுள்ள வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான் கிராமங்களைக் காப்பதற்கும் அதிகாரிகள் வாக்குறுதிகள் வழங்கியபடி நடவடிக்கைகள் எடுக்கவில்லை எனவும் இரு கிராம மக்களும் தெரிவிக்கின்றனர். (உ-13)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 13.09.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.